**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 14** |
| **Name** | : | **திரு. சதீஷ்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2024**

எதிரி 2 ஆஜர். எதிரிகள் 1,3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது சாப்டுர் கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 03.10.2016 ம் தேதியன்று நானும் எனது கிராம உதவியாளர் திரு.இராஜேந்திரன் என்பவரும் சாப்டுர் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த போது, அன்று காலை 08.00 மணிக்கு பழையூர் கிராமத்தைச் சேர்ந்த ஈஸ்வரன் த/பெ. முத்துப்பிள்ளை என்பவர் வந்து, கடந்த 23.09.2016 ம் தேதி விஜயலெட்சுமி என்பவரை கற்பழித்து கொலை செய்ததாகவும் சரணடைய வந்துள்ளதாகவும் சொன்னார். மேலும் அவர் எங்களிடம், மேற்படி ஈஸ்வரனின் நண்பரான பழையூரைச் சேர்ந்த பன்னீர்செல்வம் என்றும் அவரது நண்பரான மதுரை ஜீவா நகரைச் சேர்ந்த முகமது ஆருன் என்பவரும் முகமது ஆருனின் காதலி சுபாஷினியும்,

சுபாஷினியின் தோழி விஜயலெட்சுமி ஆகிய மூன்று நபர்களும் மதுரையில் இருந்து பேரையூர் நோக்கி வந்து, பன்னீர்செல்வத்திற்கு பேரையூர் முக்கு ரோட்டிற்கு வந்து போன் செய்ததாகவும், அதில் நானும் எனது friend யும் வந்துள்ளோம் என்று போனில் தகவல் சொன்னதன் பேரில் பன்னீர்செல்வமும் வண்டியில் அங்கு வந்துள்ளார் என்றும் அங்கிருந்து கிளம்பி சாப்டுர் வடகரைபட்டியில் உள்ள ஹோட்டலில் புரோட்டா வாங்கிவிட்டு, 4 பீர் மதுபாட்டில்கள் வாங்கியுள்ளார்கள் என்றும் சப்டுருக்கு தெற்கே உள்ள கேனி பக்கம் சென்றதாகவும், அங்கு ஆள் நடமாட்டம் அதிகமாக இருந்ததாகவும், அதனால் கல்லணை பக்கம் சென்றதாகவும் அங்கு போகும் போது ஒரு பீர் உடைந்துவிட்டதாகவும், மற்ற 3 பீரை 3 பேரும் குடித்ததாகவும் அதில், முகமது ஆருனும், சுபாஷினியும் தனியாக ஒரு இடத்திற்குச் சென்று உல்லாசமாக இருந்ததாகவும், இதை பன்னீர்செல்வம் என்பவர் போட்டோ எடுத்ததாகவும், அதற்குப் பின்னர் விஜயலெட்சுமியை பன்னீர்செல்வம் வலுக்கட்டாயமாகக் கூட்டிச்சென்றதாகவும், அங்கு விஜயலெட்சுமி தண்ணீர் தாகமெடுத்து ஓடிவந்ததாகவும், ஈஸ்வரன் அவருக்கு தண்ணீர் கொடுத்துவிட்டு அவரது நண்பரிடம் எனக்கும் படுக்கச் சொல்லு என்று சொன்னதாகவும் அதற்கு மறுக்கவே பன்னீர்செல்வமும் ஈஸ்வரனும் சேர்ந்து விஜயலெட்சுமியின் காலை மடக்கி படுக்கப்போட்டு, துப்பாட்டாவைக் கீழே போட்டு படுக்கவைத்து, இருவரும் மாறி மாறி கற்பழித்தாகவும், அப்போது விஜயலெட்சுமி கத்திக்கொண்டே கையை விடுமாறு சொன்னதாகவும், அதை ஊரில் சென்று சொல்வேன் என்று சொன்னார் என்றும், பன்னீர் செல்வம் என்பவர் விஜயலெட்சுமியின் கழுத்தில் துண்டைப்போட்டு நெறித்து கொலை செய்துள்ளார் என்றும் என்னிடம் சொன்னார். அந்த விபரத்தை சாப்டுர் காவல்நிலையத்திற்கு காலை 09.30 மணிக்கு மேல், ஈஸ்வரன் என் முன்பும் எனது உதவியாளர் முன்பும் சரணடைந்து வாக்குமூலம் கொடுத்தார் என்று காவல் ஆய்வாளரிடம் தகவல் சொன்னேன். 01.10.2016 ம் தேதியன்று கொலை நடந்தது பற்றி போலிசுக்குத்

தெரியவந்ததால் தன்னைப் பிடித்துவிடுவார்கள் என்று ஈஸ்வரன் எங்கள் அலுவலகத்தில் வந்து சரணடைந்ததாகச் சொன்னார். நான் மேற்படி ஈஸ்வரனை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். அப்போது காவல் ஆய்வாளரிடம் மேற்படி ஈஸ்வரன் என்னிடம் சொன்ன விபரங்களை ஒப்புதல் வாக்குமூலமாகச் சொன்னார். அதை ஆய்வாளர் அவர்கள் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். ஈஸ்வரன் என் முன்பு சரணடைந்து சொன்ன விபரங்களைக் குறிப்பிட்டு நான் காவல் ஆய்வாளருக்கு அறிக்கையாக ஒரு கடிதம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள 2 வது கையொப்பம் எனது உதவியாளர் திரு.இராஜேந்திரன் என்பவர் கையொப்பம் தான். **நான் காவல்துறைக்கு கொடுத்த அறிக்கை அதசாஆ.6 ஆகும். எதிரி ஈஸ்வரன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.7 ஆகும்.** அதன் பின்னர் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், 03.10.2016 ம் தேதியன்று காலை சுமார் 11.30 மணிக்கு மேல் பழையூரில் உள்ள எதிரி ஈஸ்வரனின் வீட்டில் இருந்து கத்தரிப்பூக்கலர் கைலியை எங்கள் முன்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் எனது கிராம உதவியாளாரும் கையொப்பம் செய்தோம். **அந்த அத்தாட்சி அதசாஆ.8 ஆகும். கைப்பற்றப்பட்ட கத்தரிப்பூக்கலர் கைலி அசாபொ.4 ஆகும்.**

அதன்பின் அன்றைய தினமே மதியம் சுமார் 02.30 மணியளவில் மதுரை ஜீவா நகர் வந்து, 1 வது எதிரி முகமது ஆரூன் வீட்டிற்குச் சென்று, அங்கு பஜாஜ் டிஸ்கர் இரு சக்கர வாகனத்தை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அங்கு 1 வது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் பதிவு செய்து கையொப்பம் வாங்கினார். **1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.9 ஆகும். அத்தாட்சி அதசாஆ.10 ஆகும். பஜாஜ் டிஸ்கர் இரு சக்கர வாகனம்**

**உள்ள போட்டோக்கள் (4 எண்ணம்) அசாபொ.5 ஆகும்.**

07.10.2016 ம் தேதியன்று ஆய்வாளர் வழக்கு விசாரணைக்காக வரச்சொன்னதன் பேரில், நான் எனது உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு, நானும் எனது உதவியாளர் திரு.இராஜேந்திரன் என்பவரும், வந்ததன் பேரில், எதிரி கிடாசெல்வம் என்ற பன்னீர்செல்வம் என்பவர் வீட்டில் வைத்து ஆய்வாளர் எங்கள் முன்பு விசாரைண செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்து அதில் எங்கள் கையொப்பம் பெற்றார். பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த இரும்பு கடப்பாறையும், பச்சை நிற துண்டு மற்றும் யமகா இரு சக்கர வாகனம் ஆகியவற்றை ஆய்வாளர் அவர்கள் எனது முன்னிலையிலும், எனது உதவியாளார் முன்னிலையிலும் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நாங்கள் கையொப்பம் செய்தோம். **எதிரி கிடாசெல்வம் என்ற பன்னீர்செல்வம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.11 ஆகும்.**

**அத்தாட்சி அதசாஆ.12 ஆகும்.**

**இரும்பு கடப்பாறை அசாபொ.6**

**பச்சை நிற குற்றாலம் துண்டு அசாபொ.7 ஆகும்**.

**யமகா இரு சக்கர வாகனம் உள்ள போட்டோக்கள் (4 எண்ணம்) அசாபொ.8 ஆகும்**.,

பழையூர் கிராமத்திற்கு சொந்தமான தனியார் நிலத்தின் தோட்டத்தில் இறந்த விஜயலெட்சுமியின் உடலை புதைத்தாக எதிரி ஈஸ்வரன் சொன்னதன் அடிப்படையில் காவல்நிலையத்தில் நானும் எனது உதவியாளரும் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போதும், சான்று பொருட்களை அத்தாட்சியில் கைப்பற்றும்போதும், உடன் இருந்தோம் என்று போலிசார் விசாரித்த போது சொன்னோம்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>

03.10.2016 ம் தேதியன்று ஊராட்சிமன்ற தேர்தல் நடைபெற்றது என்றால் சரியல்ல. அப்போது தேர்தல் நேரம் ஆகும்.ஊராட்சிமன்ற தேர்தல் எந்த தேதியில் நடைபெற்றது என்று ஞாபகம் இல்லை. தேர்தல் சமயம் என்பதால் அந்த ஊருக்கு அடிக்கடி போலிசாரும், தேர்தல் அதிகாரிகளும் வந்து சென்றிருப்பார்கள் என்றால் சரிதான். சாப்டுர் கிராமத்தில் மொத்தம் 2 வாக்குச் சாவடிகள் உள்ளது. 03.10.2016 ம் தேதியன்று நான் வாக்குச்சாவடிக்குச் சென்றேனா என்றால் இல்லை. எனக்கு வருவாய்துறை நிலை ஆணையின் படி விதிகள் உள்ளது என்றால் சரிதான். அந்த விதிப்படி நாங்கள் நடக்க வேண்டும் என்றால் சரிதான். எங்களுக்கு வருகைப் பதிவேடு, movement Register உள்ளதா என்றால் கிடையாது. தகவல் சொல்லிவிட்டு பணிக்குச் செல்வோம். நான் அன்றைய தினம் பணிக்கு வந்தேனா இல்லையா என்று எனது மேல் அதிகாரிகளுக்குச் சொல்லவேண்டுமா என்றால் விடுப்பு எடுக்கும் போது மேல் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிப்போம். எங்கள் கிராம அதிகார இல்லைக்கு வெளியே செல்லும்போது, எங்கள் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிப்போம். இந்த வழக்கில் நான் அவ்வாறு எனது உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லியுள்ளேன். அந்த தகவலை நான் யாரிடம் சொன்னேனோ அவர்கள் அதற்கான பதிவேட்டில் பதிவு செய்வார்கள் என்றால் பதிவு செய்யமாட்டார்கள். நான் போனில் தான் தகவல் சொன்னேன். VAO சொல்லும் ஒவ்வொரு தகவலும் தாசில்தார் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவேண்டும் என்றும் அவ்வாறு பதிவு செய்ததாகச் சொன்னால் அது இந்த வழக்கின் விபரங்கள் பாதிக்கப்படும் என்றும் எனவே பதிவு செய்யப்படவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு கொடிய குற்றம் நடைபெற்றிருந்தாலோ, தகவல் தெரியவந்தாலோ, நபர் ஒருவர் புகார் கொடுத்தாலோ, ஒரு குற்றவாளி வாக்குமூலம் கொடுத்திருந்தாலோ எங்கள் அலுவலத்தில் அதற்கான பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும் என்று

சொன்னால் சரிதான். அவ்வாறு இந்த வழக்கில் நான் எந்த தகவலும் எங்கள் அலுவலகப் பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. நான் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிடவில்லை. இதற்கு முன்பு வழக்கு சம்பவம் பற்றி ஏற்கனவே கருப்பையா என்பவர் தகவல் கொடுத்த விபரம் பற்றியும் சம்பவ இடத்திற்கு எனது உயர் அதிகாரிகள் வந்து சென்ற விபரம் பற்றியும் எனக்குத் செய்தித்தாள் மூலம் தெரியும், தாசில்தார் மற்றும் போலிசாரிடம் சொல்லி எனக்குத் தகவல் தெரியும். இந்த வழக்கில் கிரைம் மெமோ எதுவும் நான் தயார் செய்யவில்லை. இந்த வழக்கு பாதிக்கப்படும் என்பதற்காக நான் கிரைம் மெமோ தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்த ஆவணங்களை காவல்நிலையத்திற்கோ, எங்கள் உயர் அதிகாரிகளுக்கோ அனுப்பப்படும்போது எங்கள் அலுவலக முத்திரையிட்டு அனுப்பப்படவேண்டும் என்றால் சரிதான். பழையூர் கிராமம் எனது கிராம நிர்வாக அதிகாரத்திற்கு உட்பட்டது இல்லை. அதசாஆ.6 ல் பெறுநர் என்ற இடத்தில் பேரையூர் காவல் ஆய்வாளருக்கு முகவரியிட்டு அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் பேரையூர் காவல்நிலையத்திற்குச் சென்றேனா என்றால் இல்லை. நான் சாப்டுர் காவல்நிலையத்திற்குத்தான் சென்றேன். அதசாஆ.6 மற்றும் மற்ற ஆவணங்களில் எதிரிகளின் அங்க மச்ச அடையாளங்கள் குறித்து குறிப்பிடவில்லை. எதிரிகளின் வீடு ஓட்டு வீடா, காரவீடா, குடிசை வீடா, கான்கிரிட் வீடா என்ற விபரம் எனக்குத் தெரியும். அதேபோல், எதிரிகளின் வீடு சொந்தவீடா, வாடகைவீடா, ஒத்திவீடா என்றும் அதன் சர்வே எண், பட்டா எண், மற்றும் அந்த வீட்டிற்கு அக்கம் பக்கம் உள்ள குடியிருப்புகள், கடைகள் பற்றியும் எனக்குத் தெரியாது. நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்த ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சிகள் போன்ற ஆவணங்களில் எனது கையொப்பத்திற்குக் கீழே எங்கள் அலுவலக முத்திரை வைக்கப்படவில்லை என்றால் சரிதான். அதசாஆ.6 ல் எனது உதவியாளர் திரு.இராஜேந்திரன் என்பவர் கையொப்பம் இல்லை. இரு சக்கர வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும்

அத்தாட்சியில் அடித்தல் திருத்தமாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அத்தாட்சியை எந்த அதிகாரி காவல்நிலையத்தில் வைத்து திருத்தம் செய்தார் என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னிடம் எழுதிய பேப்பர்களில் தான் கையொப்பம் வாங்கினார்கள். இரு சக்கர வாகனம் யார் பெயரில் உள்ளது என்று எனக்குத் தெரியாது. அந்த வாகனத்தின் RC Book, 1,3 எதிரிகளின் ஓட்டுநர் உரிமங்களை நான் பார்வையிடவில்லை. பன்னீர்செல்வம் என்பவர் 1,4 எதிரிகள் தனியாக இருந்ததை போட்டோ எடுத்ததாச் சொன்ன போட்டோவை நான் பார்க்கவில்லை. Phone எதையும் போலிசார் கைப்பற்றவில்லை. கைப்பற்றப்பட்ட இரு சக்கர வாகனங்களின் பதிவு எண்கள் பற்றி ஞாபகம் இல்லை. பழையூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் நிறைய VAO அலுவலகங்கள் உள்ளது. நான் சாப்டுர் காவல்நிலையத்திற்கு அருகில் உள்ள VAO அலுவலகத்தில் பணிபுரிகிறேன். நான் சாப்டுர் காவல்நிலையத்திற்கு அருகில் பணிபுரிவதால் சாப்டுர் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் 2 வது எதிரி சரணடையவில்லை என்றும், எந்த எதிரிகளும் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் எந்த சான்றுபொருட்களும் எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்தற்கிணங்க உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை